# இயேசு யார்?

பாடம் - 5

## சாத்தானும் மனிதனும்

இதுவரை நாம் கற்றவற்றை நினைவுபடுத்துவோம்.

**1 . உலகில் பிறந்த ஒவ்வொருவரும் இயேசு தருகிற நியாத்தீர்ப்பைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும்.**

**2. இயேசு கிறிஸ்து மனிதனைப் பாவத்திலிருந்து ரட்சிக்க பூமியில் அவதரித்த தெய்வம். அவர் எந்த மனிதனோடும் ஒப்பிடத்தக்கவரல்லர். இயேசு, தேவனுடைய இரண்டாவது ஆள் தன்மையான குமாரன் என்பதை அவருடைய வாழ்க்கையும். இன்றும் அவர் செயல்படுவதும் தெளிவாக்குகிறது.**

**3 . ஒவ்வொரு மனிதனும் தன் பழைய வாழ்க்கையின் பாவங்கள் அனைத்தையும் இயேசுவிடம் அறிக்கைசெய்து, பாவமன்னிப்பைப் பெற்று, புதிய வாழ்க்கை துவக்கவேண்டும்.**

**4. ஜெபமும், வேதவாசிப்பும் விசுவாச வாழ்க்கையில் நீடித்திருக்க அத்தியாவசியமானவை.**

---

வானத்தையும் பூமியையும் படைத்த தேவன். தேவதூதர்களையும். வானத்தின் சேனைகளையும் படைத்தார்(எசே 28. 15). ஒப்புயர்வற்ற அவரைப் பணிந்து சேவிப்பது தேவதூதர்களின் பணியாகவும் ஆனந்த பாக்கியமாகவும் இருந்தது. பூமியைக் காக்கவும். தம்மை அங்கிருந்து ஆராதிக்கவும். தேவன் ஒரு தூதர் கூட்டத்தினைப் பூமியில் வைத்தார். இவர்களின் தலைவனாகிய லூாசிபர் என்பவன், தேவனுடன் நல்லுறவுகொண்டு மகிர்ந்திருந்தான். இவன் தன் அழகினால் மனமேட்டிமையாகி பெருமைகொண்டான். தன் இருப்பிடமான பூமியைவிட்டு வானத்துக்கு ஏறி தேவனுக்குச் சமமாக வீற்றிருக்க விரும்பினான்(ஏசா 14.12-15). தேவன் அவனது பெருமையினிமித்தமும், பூமியைக்காக்கும் கடமையில் தவறி, தனது வாசஸ்தலத்தை விட்டுவிட்டதினிமித்தமும் அவனை பூமியில் விழத்தள்ளினார். நீண்ட நாட்கள் பூமியை ஜலத்தினால் மூடி, அவனைச் சிறைவைத்து, அதன்மீது தேவனுடைய ஆவியானவர் வீற்றிருந்தார். அவனுக்கு நித்திய அழிவின்காலம் ஒன்றையும் தேவன் நிர்ணயித்தார். இப்படித் தனது அழிவின் காலம்வரை பூமியில் விழத்தள்ளப்பட்ட தூதனான லூாசிபரும் அவனுடைய கூட்டாளிகளுமே சாத்தான் என்றும் பிசாசு என்றும் அழைக்கப்படும் தீயசக்திகளாவர்.

அவர்களுக்கு தேவன் ஏற்கனவே கொடுத்திருந்த வல்லமைகளைத தங்களது அழிவுக்காலம் வரையில் பயன்படுத்த தேவன் அனுமதித்துவிட்டார். நீரினாலும். சாத்தானின் தீமைகளாலும் பாழ்பட்டுக்கிடந்த பூமியை தேவன் செப்பனிட்டு, அதில் தனது சாயலாக மனிதனைப்படைத்தர். தான் படைத்த மனிதனின் நாசியில் பல்லாயிரம் தலைமுறைகளுக்குத் தேவையான ஜீவசுவாசத்தை ஊதி, அவகைக்கொண்டு இந்த பூமிமுழுவதையும் நிரப்பும் மனிதர் கூட்டத்தைத் தோற்றுவிக்க விரும்பினார். பூமியையும், அதிலுள்ள யாவற்றையும் ஆண்டுகொண்டு, தமக்குக் கட்டுப்பட்ட தேவபக்தியுள்ள சந்ததியை அவனைக்கொண்டு உருவாக்கவேண்டும் என்று விரும்பினார். இந்த வரலாறுதான் வேதாகமத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ளது.(ஆதி 1 ̇. 1).

தேவன் மனிதனைத் தன் சாயலாகப் படைத்து அவன் கட்டாயமாயல்ல, முழுமனதுடன் தன்னை ஆராதிக்கவும், தமது படைப்புகளில் பூமியில் அவனுக்கு ஒப்படைத்தவைகளை ஆண்டுகொள்ளவும் வைத்தார். மனிதனின் எலும்பிலிருந்து அவனுக்குத் துணையாக மனுஷியை உண்டாக்கினார். இவர்களே ஆதாம், ஏவாள் என அளைக்கப்படும் நமது முற்பிதாக்கள்(ஆதி 2.17) பூமியில் தள்ளப்பட்டிந்த சாத்தானும், அவன் தூதர்களும், தங்கள் இடத்தில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனை வஞ்சகமாய் ஏமாற்றி, பரிசுத்த தேவனுக்கு விரோதமான கலகமாக, அவரால் விலக்கிவைக்கப்பட்ட கனியைப் புசிக்கவைத்தனர். தேவன் நீதியுள்ளவர் என்பதால் தனது கட்டளைக்குக் கீழ்ப்படியாத மனிதனை அழித்துவிடுவார் என்பது அவர்களின் எண்ணமாயிருந்தது. ஆனால் தேவனோ மனிதன் செய்த பாவத்திற்கு மட்டான தண்டனை வழங்கினார். முதல் மனிதனுக்குள் மறைந்துகிடக்கும் ஆயிரமாயிரம் சந்ததிகளில். ஒரு நீதியுள்ள சந்ததியை தனக்கென மீட்டுக்கொள்ளவும், பாவத்தைக்கொண்டுவந்த பிசாசின் கிரியைகளை அழிக்கும்படி யாகவும், தமது குமாரனை பூமிக்கு அனுப்பச் சித்தம் கொண்டார். குறித்த காலத்தில் தேவன் தம்முடைய குமாரனை அனுப்பப்போவதை தாமே திருவுளம்பற்றிச்சொன்னார். பின்னர் சில தீர்க்கத் தரிசிகளைக்கொண்டும் அடையாளங்களுடன் எடுத்துரைத்தார். அதன்படி அந்த அடையாளங்களை நிறைவேற்றி, குறித்த காலத்திலே தமது குமாரனாகிய இயேசுவை

வெளிப்படுத்தினார். அவரைப் பின்பற்றிச்செல்லும் அவரால் மீட்கப்பட்ட அந்தத் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்த சந்ததிதான் நீங்களும் நானும். இது சரீரம் சம்பந்தப்பட்ட சந்ததியல்ல. ஆவியின்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி. தள்ளப்பட்ட தூதனாகிய பிசாசின் அழிவுக்கு தேவன் நியமித்த காலம்வரை அவனை உலகில் அவர் தந்த சக்திகளுடன் இருக்க அனுமதித்து, அதேசமயம் இயேசுவைக்கொண்டு அவனது செயல்களை சிலுவையிலே முறியடித்துவிட்டார். எனவே தெரிந்துகொள்ளப்பட்ட நம்மேல் சாத்தானுக்கு அதிகாரமில்லை. அவனைக் கட்டவும், அவனுடைய தந்திரங்களை ஜெயிக்கவும் தமது வேத வசனமாகிய பட்டயத்தையும், பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனையும் தேவன் தந்துள்ளார். பிசாசின் அரிவுக்காலம் விரைவில் வருகிறது. அதுவரை அவனை ஜெயித்துக்கொண்டேயிருப்போம்.

<u>சாத்தானின் தன்மைகளும். செயல்களும்</u> -

1. அவன் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். அதாவது தனது இடத்தில் படைக்கப்பட்ட மனிதன் பாவம்செய்து, அதன் தண்டனையாக நரகத்தில் தன்னுடன் தள்ளப்படுவதற்கு என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்துகொண்டிருக்கிறான்.

2. சாத்தானாகிய சத்துரு பொய்யனும். பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான். இவ்வுலகத்தின் அழிந்துபோகும் இன்பங்களை, அழியாதது என நினைக்கவைத்து, மனிதன் தன் சொந்த ஆசைகளின்படி தேவனுக்குவிரோதமாய் பாவம் செய்துகொண்டே இருக்க வைக்கிறான். **சினிமா, விபச்சாரம், இசை என்று பலவித கவர்ச்சிகளில் மனிதர்கள் மூழ்கி தேவனை மறக்கும்படி செய்கிறான்.**

3. இயேசு ஒருவரே பாவங்களை மன்னித்து, பரலோகம் சேர்க்க வல்லவர் என்பதால், <u>அவரை அறிந்துகொள்ளவிடாதபடி தடுக்கிறான்.</u> இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களிடமும் எப்போது வழிவிலகுவார்கள் என எதிர்பார்த்து கெர்ச்சிக்கிற சிங்கம்போல் சுற்றித்திரிகிறான். ஜெபமும் வேதவாசிப்பும் நமக்கு ஆகாரமாயிருப்பதால், அதைத்தடுத்து நம்மைப் பலவீனப்படுத்துகிறான்.

4. இரவும் பகலும் மனிதன் செய்த தவறுகளை தேவனிடம் சுட்டிக்காட்டி, அவனை அழிக்கும்படி கோருகிறான். நல்வழியில் செல்பவனுக்கு அவனுடைய தோல்விகளையும், பழைய பாவ வாழ்க்கையின் இன்பங்களையும் நினைவுபடுத்தி தேவனைவிட்டு பின்வாங்கச்செய்கிறான்.

5. இயேசுக்கிறிஸ்துவின் வழி முற்றிலுமாக சரியானதல்ல என்றும், பாவம் செய்வது இயற்கையானது அதற்காக வருந்தத்தேவையில்லை என்றும், கடவுள் இல்லை என்றும், மரணத்திற்குப்பின் வாழ்க்கை இல்லை என்றும், கடவுளை வணங்கி அவருக்குச் செய்ய வேண்டிய பூஜைகளை மட்டும் செய்தாலே சொர்க்கம் கிடைத்துவிடும் என்றும், எல்லா மதங்களும் ஒன்றுதான் என்றும் **மனிதர்களை நம்பவைத்து, அவர்கள் ஒருநாளும் மனந்திரும்பி புதிய வாழ்க்கை துவக்கிவிடாதபடி செய்கிறான்.**

6. நோய்கள், வெறிகள், மந்திரவாதங்கள், பாரம்பரிய வழிபாடுகள், ஆவியுலக வழிபாடுகள், மரித்தவர்களை வழிபடுதல், தீய பழக்கங்கள், பணவெறிகள், ஆகிய நேரடித் தாக்குதல்களால் மனிதர்களை நிம்மதி இழக்கவைக்கிறான். கஷ்டங்களைத் தீர்த்துவைக்க பலிகள், பூஜைகள், தீவிர விக்கிரக ஆராதனைகள், நேர்ச்சைகள் போன்ற **பயனற்ற காரியங்களைச்செய்ய வைத்து வாழ்நாளை வீணாக்குகிறான்.**

7.பணப்பெட்டிக்கு முன்பாக பத்தியைக் கொளுத்தி பூஜை செய்வது முதல், சரீரத்தில் பலவித கம்பிகளைக் குத்திக்கொண்டு நெருப்பில் ஓடுவதுவரையிலான தீவிர விக்கிரக ஆராதயை ஊக்குவிக்கிறான். இதற்கு ஆதரவாக சாமியார்கள், மடங்கள், போலி ஞானாந்திகள், சித்து வேலை செய்பவர்கள் போன்ற மகா பாவிகளையும், வியாபாரிகளையும் பயன்படுத்துகிறான். இவர்களுக்குக் கிடைக்கும் உலக வசதிகளைக் காட்டி அநேகமாயிரம்பேரை வழிவிலகி வாழச்செய்கிறான்.

<u>சாத்தானின் முடிவு</u> -

தேவன் முன்குறித்துள்ளபடி, விரைவில் வரப்போகும் நியாயத்தீர்ப்பு நாளிலே சாத்தானும், அவனுடைய தூதர்களும், இயேசுவை ஏற்றுக்கொண்டு புதிய வாழ்க்கை துவக்காத கோடானுகோடி மக்களும், நித்திய நரக அக்கினியில் தள்ளப்படுவார்கள் (மத் 13 :41 - வெளி 20:10 21:8 - 2 பேது 2:4 - மத் 25.41).

<u>சாத்தானிடமிருந்து எப்படித் தப்புவது? அவனை எப்படி ஜெயிப்பது.?</u>

1. முதலாவது சாத்தானின் தந்திரங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். இயேசுக்கிறிஸ்துவுக்கும், வேதத்தின் எந்தஒரு வசனத்துக்கும் எதிராக அல்லது வித்தியாசமாகக் காணப்படும் எதுவும் சாத்தானின் தந்திரமே. இதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்கிறேன்

அ) பொய் சொல்லாதிருப்பாயாக(எந்த நிலையிலும்) என்பது தேவனுடைய கட்டளை. சாத்தானோ ஒரு அத்தியாவசியத்துக்கு, மற்றவர்களுக்கு நல்லது செய்ய, பெரிய நஷ்டங்களைத்தவிர்க்க, மற்றவர்களுக்குக் கெடுதல் செய்யாத வகையில், நல்ல நோக்கத்திற்காக, பிழைப்புக்காக, தொழிலுக்காக நீ ஓரிரு பொய்களைச் சொல்வது தவறில்லை என்று மனிதர்களின் மனதில் தோன்றச்செய்து அதன்படி செய்யவைப்பான்.

ஆ) எந்தச் சூழ்நிலையிலும் விபச்சாரம் செய்யாதே, ஒரு பெண்ணை இச்சையுடன் பார்க்காதே என்பது தேவனுடைய பரிசுத்தமான கட்டளை. சாத்தான் மனிதனிடம் நீண்ட நாட்களாக மனைவியைப் பிரிந்திருக்க நேரும்போது, ஒரு கைவிடப்பட்ட பெண்ணுக்கு வாழ்வளிக்க, இயற்கை உணர்ச்சிகளுக்கு வடிகாலாக, ஒரு பெண்ணே உன்னை ஆசையுடன் அழைக்கும் வேளையில், ஒருசிலமுறை மட்டும் நீ விபச்சாம் செய்துவிட்டால் தவறில்லை என்று சொல்லுவான். அநேகர் இந்த வஞ்சக நியாயத்தைக் கடைப்பிடித்து தேவனுக்குத் தூரமாக விலகி மாண்டுபோகிறார்கள். அநேக ஜனங்கள் என்னுடைய சூழ்நிலையில்இப்படித்தான் செய்ய முடியும் என்று தங்கள் பாவங்களை நியாயப்படுத்திக்கொண்டு தொடர்ந்து பாவத்தில் வாழ்வது இந்த வஞ்சக சாத்தானால்தான்.

பாவத்திற்குத் தப்பவிரும்பும் மனிதன் தேவனைநோக்கிக் கூப்பிடும்போது அவர் முற்றிலும் புதிய வரிகளில் அவனை விடுவிக்கவே செய்வார். ஆனால் அவனோ பாவம்செய்துவிட்டு அதற்கான சூழ்நிலைகளைக் குற்றம்சாட்டுவதும், தேவனையே குற்றம் சாட்டுவதும் சாத்தானால்தான். விசுவாசிகள் தவறுசெய்துவிட்டு வருந்தும்போது தேவன் அவர்களுக்கு மட்டான தண்டனை வழங்கி, மீண்டும் நல்வழியில் நடத்த விரும்புகிறார். ஆனால் சாத்தானோ ஒருபுறம் பாவம்செய், தேவன் உன் சூழ்நிலையைப்புரிந்துகொண்டு உன்னை மன்னிப்பார் என்று தூண்டிவிட்டு, பாவம் செய்தவுடன் உன் பரிசுத்த வாழ்க்கை போய்விட்டது, தேவன் உன்னை மன்னிக்கவேமாட்டார், எனவே பழைய வாழ்க்கைக்கே திரும்பிவிடு, தேவன் சொல்கிறபடி மனிதன் வாழ்முடியாது என்று சொல்வான். சாத்தானின் செயல்கள் அனைத்தும் மனிதனின் மனதில்தான் தோன்றும் எண்ணங்களாகத்தான் துவங்குகிறது.

பல சமயங்களில் நல்லவர்கள் சொல்லும் நல் ஆலோசனை போலவே சாத்தானின் ஆலோசனை இருக்கும். வேதத்திற்கு மாறாக. கொஞ்சம் கோணலாக, எது இருந்தாலும் அது சத்துருவின்செயல்தான் என்பதைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதுவே முதல் வெற்றியாகும்.

2. தேவனுடைய வார்த்தைகளைக்கொண்டு அந்த வஞ்சகனோடு யுத்தம் செய்ய வேண்டும். நடந்தாலும், படுத்திருந்தாலும், மரித்தாலும், வாழ்ந்தாலும் நான் தேவனுடைய பிள்ளை. எனவே அவர் வெறுக்கும் எந்தப் பாவத்தையும், மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் நான் செய்யமாட்டேன் என்ற உறுதி வேண்டும். இயேசுவின் ரத்தத்தினாலும், அவருடைய வசனத்தினாலுமே நாம் சாத்தான் கொண்டுவரும் தீய எண்ணநகளிலிருந்து விடுதலைபெற முடியும். ( யாத் 4 . 7 - 1 பேது 5.8 - வெளி 12.11)

3. ஒவ்வொரு நாளும் தேவனே என்னை இன்று சாத்தானின் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் ரட்சித்துக்கொள்ளும் என்று ஜெபம் பண்ணுங்கள். ஜெபத்தைவிட சாத்தானை விரட்டும் சக்தி எதுவுமில்லை. நமது **மாம்ச பலத்தினால் அல்ல ஜெபத்தினால் உடனடியாகக் கிடைக்கும் தேவ பெலத்தால் அவனை ஜெயிக்கவேண்டும்.** (மத் 26.41 6.31 )

4. இயேசு பாவத்தை மன்னிக்கிறவர் மாத்திரமல்ல, மீண்டும் பாவஞ்செய்யாதபடி சத்தியத்தில் நம்மை நடத்துகிறவரும்கூட. அவருடைய செம்மையான நல்வழியிலிருந்து வழுவாதபடி நம்மைக் காத்து, தமது பரிசுத்த சந்நிதானத்தில் மகிமையோடே நிறுத்த வல்லவர் இயேசுவே. அதை உறுதியாக நாம் நம்பும்போது, விழுந்தாலும் அவருடைய கிருபைகளைப் பற்றிக்கொண்டு எழுந்திருப்போம் (யூதா 1:24).

இதை வாசிக்கும் அன்புச் சகோதரரே! இந்தப் பொல்லாத சாத்தானின், உலக அதிகாரங்களைக்கொண்ட சத்துருவின், தேவனைவிட உலகத்தை அதிகமாக நினைக்க வைக்கும் மனித கொலைபாதகனின் தந்திரங்களை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். மனிதனின் மனக்கண்களைக் குருடாக்கிப்போடும் இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய அவனை

ஜெயிக்க தேவன் நமக்கு அதிகாரமளித்துள்ளார். ஏனெனில் அவர் சகல அதிகாரங்களையும் உடையவரும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமானவர். நமக்குள் அவர் இருக்கும்போது நாம் வெற்றிபெறுவோம். கிறிஸ்துவைப் பற்றிக்கொண்ட வாழ்வில் இடறல்கள் வந்து நீங்கள் பாவம் செய்துவிட்டால், மீண்டும் பழைய பாவ வாழ்க்கைக்குத் திரும்பிவிடாதீர்கள். மட்டான தண்டனைகளை அளித்து, மீண்டும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவை மீண்டும் பற்றிக்கொண்டு, நித்திய நரக தண்டனைக்குத் தப்பிக்கொள்ளுங்கள். உயிரோடிருக்கும் ஒவ்வொரு நாளும் மீண்டும் மனந்திரும்பி இயேசுவைப் பற்றிக்கொள்ள தேவன் கொடுத்த கிருபையின் காலம் என்பதை எப்போதும் மறந்துவிடாதீர்கள்.

ஒருபோதும் சோர்வுற்று ஜெபத்தையும், வேதவாசிப்பையும் விட்டுவிடாதிருங்கள். இவ்விரண்டும் விசுவாச வாழ்க்கையில் நமக்கு உணவும், தண்ணீரும், ஆயுதமுமாகும். எதிரிகளுக்கு உணவும் தண்ணீரும், ஆயுதமும் கிடைக்காவிட்டால் அவனை வீழ்த்திவிடலாம் என்பதால்தான் சாத்தானும் விசுவாசிகளின் வாழ்வில் ஜெபத்தையும், வேதவாசிப்பையும் எவ்விதத்திலும் தடுக்க முயற்சிசெய்கிறான். ஜெபத்தையும், வேதவாசிப்பையும், அதனால் பெற்ற விசுவாசத்தையும் இழந்துவிடாமல் ஜாக்கிரதையுள்ளவர்களாய் நீங்கள் பரிசுத்த வாழ்க்கையில் தொடர இயேசுவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துக்கள்.

**கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்**

1) **சாத்தான் யாரென்று அறிந்துகொண்டீர்கள்? அவன் ஏன் மனிதனுக்கு கேடுசெய்ய விரும்புகிறான்?**

2) **தேவனுடைய நியாயத்திற்கும், சாத்தான் சொல்லும் உலக நியாயத்திற்கும் உள்ள ஒரு வித்தியாசத்தைக் கூறுங்கள்.**

3) **சாத்தானின் வெளியரங்கமான செயல்கள் யாவை?**

4) **சாத்தானை ஜெயிக்க தேவன் நமக்குக் கொடுத்துள்ள ஏதுக்கள் யாவை?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

© copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved

